# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூச] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷம் புரட்டாதிமீ உஉ உ செவ்வாய்க்கிழமை (7 Octo. 1952) [இல - சுகூ]

# தமிழ்வழி வந்த மலையாளம்

## இரு மொழிகளுக்கும் உள்ள தொடர்பு

### சரித்திரச் சான்று

இனி, சரித்திர நெறியால் நோக்குவோம். பூர்வ காலத்தில் வடக்கே வேங்கட மலையும், தெற்கே குமரிமுனையும் மற்ற இரண்டு புறத்துங் கடலும் எல்லையாகவுடைய நிலப்பரப்பிலே வாழ்ந்தவர்கள் தமிழ் மக்களே. அவர்கள் பேசிவந்த மொழி தமிழே. இவை தக்க சான்றுகளால் அறியப்படுகின்றன. தொல்காப்பியப் பாயிரத்தில்,

வட வேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து.

என வருகிறது. இதனையே சிறிது விளக்கி

வடக்கும் தெற்கும்
குணக்கும் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற்
பௌவமென்று
அந்நான் கெல்லை யகவயிற்
கிடந்த

என வேறோராசிரியரும் கூறுகின்றார். ஆகவே தமிழ் ஒன்றே பண்டைக்காலத்தில் வேங்கடமலைக்குத் தெற்கேயுள்ள தென்னாட்டில் வழங்கி வந்ததாம். இப்பகுதியில் அரசாட்சி புரிந்தவர்கள் சேர சோழ பாண்டியர் என்ற மூன்று பேரரசர்களுமாவர். இவர்களை,

தண்டமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவர்
எனப் புறநானூறும், (35)
வண்புகழ் மூவர் தண்பொழில்
வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர்
வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார்
புலவர்

எனத் தொல்காப்பியமும் (செய்யுளியல் 79) கூறுகின்றன. சேருட்பட இம்மூவரும் தமிழர்கள் என்பதில் ஒருவருக்கும் சந்தேகமேயில்லை. 'தண்தமிழ்க் கிழவர்' என்று இவர்களைப் புறநானூறு குறித்துள்ளது இதனைத் தெளிவாக்குகின்றது. அன்றியும் புறநானூற்றில் வரும் பல செய்யுட்கள் சேரரைத் தமிழரசாகவே கொண்டு பாடியுள்ளன. பதிற்றுப்பத்து என்ற தமிழ் நூல் முழுவதும் உதியன் சேரல் முதலிய சேர அரசர்களைப்பற்றியதே. ஐங்குறுநூறு என்ற தொகைநூலை ஒரு சேர அரசினர் தொகுப்பித்தனர். தொல்காப்பியரோடு உடன் கற்ற ஆசிரியர் ஒருவர் விளவங்கோட்டுத் தாலுக்கிலுள்ள அதங்கோடு என்னும் ஊரினர். இதனால் இவருக்கு 'அதங்கோட்டாசான்' என்று பெயர் வழங்கியது. தொல்காப்பியரும் சேர நாட்டினர் என்று கருதுவதற்கு இடமுண்டு. சேரநாட்டு அரசர்கள் பலர் தமிழ்க் கவிஞர்களாயும் உள்ளனர். உதாரணமாக குலசேகராழ்வார், சேரமான் பெருமாள், இளங்கோவடிகள் முதலியோரைக் கூறலாம். சிலப்பதிகாரத்தின் கதாநாயகனாகிய சேரன் செங்குட்டுவன்.

'அருந்தமிழாற்றல் அறிந்திலர் ஆங்கெனை' (26-161; 185, 27-5) என்று ஆரிய மன்னரைக் குறித்துச் சொல்லித் தமிழரசர்களது தமிழ்ப் பிரதிநிதியாக வடக்கே சென்று போர்புரிந்து வென்றான். இங்ஙனம் கதை அமைத்துள்ளார் சிலப்பதிகாரஞ் செய்த சேரகுலத்து இளங்கோவடிகள்.

### பெயர்கள்

சேரநாட்டிலுள்ள பண்டை நகரங்கள் பலவும் தமிழ்ப் பெயர்களையே தாங்கின. உதாரணமாக, கருவூர், தொண்டி, மாந்தை, வெளியம், கழுமலம், தகடூர் முதலியவற்றைக் காணலாம். இங்ஙனமே நதிகளும், மலைகளும்; உதாரணங்கள் பொருநை, பெரியாறு, கொல்லிமலை முதலியன. மக்கட்குரிய இயற்பெயர் முதலியனவும் இத்தன்மையனவே.

ஆய் என்ற பெரும்புகழ் படைத்த அரசனொருவன் சேரநாட்டிலே ஆட்சி புரிந்துபெரிய வள்ளலாய் விளங்கினன். இவன் ஆண்ட சேரநாட்டை ஆய்நாடு என முற்காலத்துக் கிரேக்கர்கள் வழங்கினர்.

இங்கே காட்டிய சான்றுகளுக்கு எதிராக வேற்றுமொழி இச்சேரநாட்டில்முற்காலத்தே வழங்கியதாக ஒரு சான்றுமில்லை. இது நன்றாக மனங்கொள்ளுதற்குரியது.

### கொடுந்தமிழ்

வேங்கட முதற் குமரிவரையுள்ள பெரிய நிலப்பரப்பில் வழங்கிய தமிழ் எங்கும் ஒரே தன்மையதாய் இருந்ததெனல் பொருத்தமாகாது. அங்கங்கே சிற்சில வேறுபாடுகள் இருத்தல் முற்றிலும் இயல்பே. இவ்வேறுபாடுகளைக் குறித்தனவே கொடுந்தமிழ் நாடுகள்என்பன.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

அருளாயென்னை உடையானே

திருச்சிற்றம்பலம்.

நல்கா தொழியா னமக்கென் றுன் னும்பி தற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தா லினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கு முயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே.

திருச்சிற்றம்பலம்.

# வீதிகள் விபத்து நிலையங்களாகின்றன

## இயந்திரங்கள் எம வாகனங்களா?

நிமிடத்துக்கொரு மோட்டார் இயந்திரம் உருவாகின்றது. நிமிடத்துக்கொரு விபத்தும் நேருகின்றது. இதுதான் வேகமயமான உலகின் விருத்தி.

சாரதிகளாகும் எமன்கள் மோட்டார் இயந்திர வாகனங்களில் இவர்ந்து இந்தச் சங்காரத் தொழிலை நடத்துகிறார்கள்.

சாரதிகளிற் பலவேறு வகுப்புகள் உண்டு. ஒரு சாரார் ஒரு சிறு முன்னறிக்கை கொடுப்பார்கள். ஆனால் வீதிகளில் நடமாடுபவர்களுக்கு விபத்தை விலக்கப் போதிய நேரமிராது.

இன்னொரு சாரார் சர்வாதிகாரிகள். சந்தியென்றாலென்ன சந்தையென்றாலென்ன சனக் கூட்டமென்றாலென்ன ஒரே வீச்சாகப் போவார்கள். தப்பிக்கொள்ள இயன்றவர்கள் தப்பிக்கொள்ளலாம்.

வேறொருசாரார் மூலை முடக்கு, குறுக்குத்தெரு, ஒழுங்கை என்ற வழிகளால் உயிர்ப்பலி தேடி ஓடோடியும் இரைந்து கொண்டு வருவார்கள்.

இப்படியாக உள்ள இந்த எமவாகனங்கள் தங்கள் இனத்தவரோடும் போராடுவாரகள் புகையிரதங்களுடனும் யுத்தஞ் செய்வார்கள். இந்த எமன்களுக்கும் அந்த எமனுக்கும் ஒரு பெரும் வித்தியாசம். இவர்கள் உயிர் வேட்டையிலே தம்முயிரையும் பலி கொடுப்பர். ஆனால் அந்த எமன் அவ்வாறில்லை.

அரசாங்கம் இந்த எமத் தொழில் பூண்டாருக்கு ஒரு விதத்தில் உதவி புரிகின்றது. சாரதித் தொழிலுக்கு உத்தரவு கொடுக்கும் வகையில் மிகவும் தாராளமாய் இருக்கின்றார்கள். ஒருபோது நெருங்கி வளர்ந்து வரும் குடிசனத் தொகையைக் குறைத்துவிட இதுவோர் கபட யோசனைபோலும்!

அதோடு வீதிகள் போக்குவரத்துக்குப் போதாத நிலையில் இருப்பதைக் கண்டும் காணாதார்போல் அரசாங்கம் இருக்கின்றது. தேசத்தோடு தேசம் போர்புரிந்து உயிர் போக்கினாலும் வீரத் தியாகமாய் விடும். இந்த விதமாக உயிர்ப்பலி நிகழ்வதை அரசாங்கம் கண்டும் காணாதார் போல் இருப்பது சனநாயகமுறையா.

# சிவஞானபோதச் செம்பொருள்

## பன்னிரண்டாஞ் சூத்திரம்

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ,
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே.

"சிவபேற்றினை அடைந்த
சீவன் முத்தன்
மும் மலங்களையும்
அறக் களைவன்

சிவத்தோடு ஏகமாய் நின்று சிவபணி இயற்றும் உயிர்கள் மும்மலங்களினின்றும் நீங்குவரென்றோம் என்றாலும் அவர்கட்கு உடம்பிருப்பதால், பாமுத்தரெனப்படாது வினைவாதனை வயத்தால் தாக்கலாமென்பது பெறப்படும். இதுவுமன்றி முன்வினை அனுபவத்தின்கண் தற்போதமும் கூடுமேல் விருப்பு வெறுப்புக்களுண்டாகி ஆகாமிய வினையும் தாக்குவதாகும். அக்காலத்தில் நீல முதலாம் பொருள்கள் அச்சீவன் முத்தனுக்குக் காட்சியாகி மாயையாற் தாக்குறுதலும், அக்காட்சியாற் சுட்டறிவு மேற

### திரு. V. P. காந்திமதிநாதபிள்ளை அவர்கள்

சீவன் முத்தரெனப்படுவரென்றும் சொன்னோம். இவர்க்கு உடம்பிருப்பதால் வருங்கேடென்னை. அக் கேட்டை நீக்குமாறெங்ஙனம் என்பதையும் ஆராய்வது அவசியம். ஒரு காலத்திற் காயம் வைக்கப்பட்டிருப்பின், அது நீக்கப்பட்ட பின்னும் அக்காலத்தில் ஓரோவழி அக்காயவாசனை கலந்திருப்பதை நாம் அறிவோம். அதுபோலவே, உடம்புள்ளளவும் பிராரத்தவினை அவ்வுடம்பினை ஒட்டி நிற்பதால் அவ்வுடம்பினையுடைய சீவன்முத்தன் அவ்வினையினின்றும் [illegible] னும், அவனையும் [illegible] பட்டு வியாபக அறிவு கீழ்ப்பட்டு ஆணவ மலத்தாற் தாக்குறுதலும் கூடுமென்பதும் பெறப்படும் பெறப்படவே, இச்சீவன் முத்தன் சிவபோக வாழ்வை ஓரோவழி இழக்க நேருமாதலால், இம் மூன்று மலங்களில் எதுவும் தன்னை ஒரு காலத்துந் தாக்குறாதவாறு, அவற்றை அறக்களைவதற்கான உபாயத்தை இச் சீவன் முத்தன் தேடிக்கொள்ளல் வேண்டும். அவ்வுபாயம் யாது என்பதை ஆராய்வாம்.

[illegible] தாக்குவ தற்குக் காரணமாய்நிற்பது இவனது தற்போதமே. இத் தற்போதமே இவன்பால் விருப்பு வெறுப்புக்களையும் அதுபற்றிப் பிராரத்த ஆகாமிய வினைகளையும் அதுபற்றி மாயை ஆணவங்களையும் ஓரோவழி தாக்கும்படி செய்யும். இதனையே சீவன் முத்தன் தனக்கு மேற்கூறியபடி கிடைத்துள்ள சிவஞானத்தினாற் களைவன். அதாவது காயமிருந்த கலத்தைச் சுத்த நீராற் கழுவக் கழுவ அக்காயவாதனை ஒரு காலத்தும் கிளம்பாது அடங்குதல்போல, இச்சீவன் முத்தனும் தன்மாட்டுண்டாந் தற்போதத்தைச் சிவஞானம் என்னும் நீராற் சுத்திகரிக்கச் சுத்திகரிக்க, அத் தற்போதம் ஒருகாலத்தும் கிளம்பாதபடி அடங்கும். சிவஞானத்தாற் சுத்திகரித்தலாவது அதன் கண் உறைத்து நிற்றலேயாகும். இவ்வாறு சீவன் முத்தன் மும் மலங்களையும் களைவன் என்னும் கருத்தையே 'செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங் கழீஇ' என்று இச் சூத்திரம் உணர்த்தும். 'நோன்றாள்' என்றதற்கு நோக்கும் அல்லது பொறுக்குந் தாள் அதாவது சகல சராசரங்களையும் தாங்குந் திருவடியென்பது பொருள். அம்மலம் என்பதற்கு அவ் வியல்பினையுடைய மலம், அதாவது செம்மலர் நோன்றாளைச் சேரவொட்டாத இயல்பினையுடைய மலம் என்பது பொருள்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## யாழ்ப்பாண நகர மின்சாரம்

அரசாங்க மின்சாரப் பகுதியாருக்குக் கொடுபடவேண்டிய பணம் யாழ்ப்பாண நகரசபையாற் கொடுபடவில்லையாம். இக்காரணத்தால் யாழ்ப்பாண நகருக்கு மின்சாரம் கொடுத்தல் நிற்பாட்டுப்படக்கூடுமென்றும் யாழ்ப்பாண நகர் இருளில் அமிழ்ந்தவேண்டி வருமென்றும் அறியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ௵ புரட்டாதி ௴ உ௨ ௳ செவ்வாய்க்கிழமை

## ஆச்சிரமத் தொண்டு

உலகம் எந்த வழியிற் செல்கின்றது; முன்னேற்றமா பிற்போக்கா? இதற்கு முடிவான விடை சொல்லவியலாது நிற்கின்றனர் சிலர். முன்னேற்றம் என்றே வாதாடுகின்றனர் பிறிதொரு சிலர். இல்லை அது பிற்போக்கே என்று தீர்மானங் கூறுகின்றனர் இன்னுஞ் சிலர். போக்கு எவ்வாறாயினும் ஆகட்டும். முன்னேற்றமாக உலகம் செல்ல வேண்டுமேயானல் என்ன ஆக்கவேலை புரிதல், பிற்போக்கைத் தடை செய்ய எவ்வாறுதொண்டுசெய்தல் என்ற வகையிலே தேசத் தொண்டர்களும் தலைவர்களும் திட்டம் வகுத்து ஆவன செய்வாரேல் அவ்வளவும் போதும் என்று விடலாம்.

காந்திப் பெரியார் காட்டிய நன்னெறியில் முன்னணியில் வைக்கப்பட்டுப் பாராட்டப் பட்டு வருவது கிராமத் தொண்டு. இப்பெரும் பணியை ஆற்றுவதற்கு நற்குணமுள்ளவர்களை ஒருங்கு சேர்த்து நல்லாரொருவர் தலைமையில் நற்பழக்கங்கள் எவை என்றும் அவற்றின்வழி ஒழுகுதல் எவ்வாறென்றும் முன்மாதிரியான கல்வியூட்டுவித்தலே சாலச் சிறந்த முறையென ஆச்சிரமவாழ்வை மகாத்மாகாந்தி காட்டிவைத்தார். அந்த ஆச்சிரமத்தில் நல்வாழ்க்கை முறையைப் பயின்ற தொண்டர்களே பின்னர் தேசப் பணியிற் சிறந்து விளங்கினர். இந்த ஆச்சிரம வாழ்க்கை நிலையங்கள் தொன்றுதொட்டு நின்று வருகின்றன. அக் காலத்திலே முனிவர்கள் இருடிகள் யோகிகள் இப்பெருநெறியைக் காட்டி வந்தனர். மதபோதனையே வாழ்க்கைச் செந்நெறியையும் வகுத்து வந்தது. சமயப்பற்றும் ஆசாரமும் குன்றிப் போலிக் கொள்கைகளும் மாயவாழ்க்கை முறையும் மலிந்துவர ஆச்சிரம நிலையங்கள் அருகிவிட்டன. இந்த நிலைமையிலே பரதநாட்டிலே எஞ்சி நின்று தொண்டாற்றிய ஆச்சிரமங்கள் மதநெறியையே பெரும்பாலும் காட்டி வந்தன. ஆகவே காந்திப் பெரியார் சமய ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட அன்புத் தொண்டு நிலையங்களை நிறுவிப் பெரும்பணி புரிந்து வந்ததுமன்றி ஆங்குப் பயின்றவர்கள் ஆங்காங்கு வாழ்க்கை நெறி வழிகாட்டிகளாகக்கூடிய ஒழுங்கையுஞ் செய்து வைத்தார். இதன் பயனாக இப்பொழுது யாழ்ப்பாணத்திலே நீர்வேலியிலே ஒரு ஆச்சிரமம் ஆரம்பமாயிருக்கின்றது.

இந்த நற்பணியை நாம் பாராட்டுகின்றோம். இக்காலப்போக்கில் இளைஞர்கள் தடுமாறுகிறார்கள் என்பது வெளிப்படை. கொள்கைகளையும் கொள்கையாளர்கள் தம் கூற்றுக்களையும் அப்படியே மனனம் செய்துவிட்டு ஏட்டுச்சுரைக்காய் போன்று ஊரூராய்த் திரிந்து சொற் பெருக்காற்றிவிட்டால் அது சமூகத் தொண்டாகாதென்பதை இந்த ஆச்சிரமங்களே எடுத்துக் காட்டமுடியும். தொண்டு செய்ய வேண்டும் என்று சொல்லித் திரிபவர்கள் தாமாகவே தொண்டு புரிதல் வேண்டும். ஆகவே ஓரிடத்திலே கூடி முறைப்படி வாழ்க்கை நெறி இன்னதென்பதை நல்லொழுக்கப் பயிற்சி பெற்றோரிடம் கற்றுத் தெளிய வேண்டும். இந்த நன்முயற்சியிற் கிராமத் தொண்டில் ஈடுபட விருப்பமுள்ளவர்கள் உதவி புரிதல் வேண்டும். பல்கலைக் கழகப் பயிற்சியிலும் பார்க்க நல்வாழ் வொழுக்கப் பயிற்சியே பண்புடைத்தாகும், பலனுடைத்தாகும். ஆனல் ஆச்சிரமம் ஒன்று ஓரிடத்தில் ஆரம்பிக்கப் பட்டது. அதுபோல் ஒவ்வோரூரிலும் ஒவ்வொன்று நிறுவ வேண்டும் என்று வேடிக்கைக்காகப் பெயரளவில் இந்த நிலையங்களை உண்டாக்கிவிட்டு ஆச்சிரம வாழ்க்கை ஒழுங்குக்கே இழுக்கை வரவழைத்துவிடக்கூடாது.

கிராமங்களிலே செய்யப்படவேண்டிய பணிகள் பல. போக்குவரத்து, குடிசைகள், சுகாதார ஒழுங்குகள், நீர்நிலைகள் பால் மோர்ப் பண்ணைகள் கல்விக்கழகங்கள் வைத்தியசாலைகள் ஆலய பரிபாலனம் இன்னும் இவைபோன்றவற்றைச் சீர்ப்படுத்துதலும், விவகாரம் சச்சரவு மதுபானம் களவு கொலை சூதாட்டம் முதலியன இல்லாமற் றடுத்தலும் குறிப்பிடக்கூடியவை. ஆச்சிரம வாழ்வில் நின்று தொண்டின் மகிமை அறிந்துணர்ந்து அவ்வழிநடப்பவர்களே இவ்வாறு பணி செய்யும் ஆற்றலும் அறிவும்உடையராவர் அன்றிப் பட்டம் பதவிக்காக ஆண்டாண்டு கூடி அறிக்கை வாசித்து விழாக்கொண்டாடி வேடிக்கைவிரும்புபவர்கள் பிற்போக்காளராய்க் கிராம முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகளாய் நிற்பர்.

திருத்தொண்டர் திருநாள்

# தில்லையில் அந்தணரூகிய திருநாளைப்போவார்

## தீக் குளித்துச் சிவலோகநாதனைச் சேர்ந்தார்

சோழ நாட்டிலே ஆதனூரிலே புலையர் குலத்திலே, மறந்தும் வேறொன்றையும் நினையாது சிவபெருமானுடைய திருவடிகளையே நினைத்து வாழ்ந்த நந்தனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவாலயங்களிலேயுள்ள பேரிகை முதலியவற்றுக்குத் தோலும் வாரும், வீணைக்கும்யாழுக்கும்நரம்பும் அருச்சனைக்குக் கோரோசனையுங் கொடுத்துத் திருவாயிலின்புறத்தே நின்று அன்பு மேலீட்டினல் ஆடிப் பாடி எத்தும் இயல்பினராயிருந்தார்.

ஒரு நாள் திருப்புன்கூரீசனைத் தரிசித்துப் பணிசெய்ய விரும்பி அங்கு சென்றுசுவாமியைநேரேகும்பிட விரும்பினர். திருப்புன்கூரீசன் அவர் விருப்பத்தின்படியே இடபதேவரை விலகச்செய்து காட்சியளித்தருளினர்.

'சீரேறும் இசைபாடித்
திருத்தொண்டர் திருவாயில்
நேரேதும் பிடவேண்டும்
எனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறும் எயிற்புன்கூர்க்
கண்ணுதலார் திருமுன்பு
பேரேற்றை விலங்கஅருள்
புரிந்தருளிப் புலப்படுத்தார்"

அவ்வாறு தரிசித்து அங்கே குளமொன்று வெட்டியபின் தனது ஊருக்குத் திரும்பினர்.

இப்படியே பல தலங்களுக்குஞ் சென்று வழிபட்டு வருங்காலத்தில் ஒரு நாள் சிதம்பர தரிசனஞ் செய்யப் பெரு விருப்பங்கொண்டு அன்றிரவு நித்திரை செய்யாதவராய் நெஞ்சஞ் சிதம்பரத்திலாகக் காலங் கழித்தார். விடிந்தபின் அங்கேபோய் அணிமையில்நின்றுவணங்குதல்தன் குலத்துக்குப் பொருந்தாதென்று நினைத்துப் போகாதொழிந்தார். ஆனல் ஆசைமிகுதலாலே நாளைக்குப் போவேம் நாளைக்குப்போவேனென்று நாட்கள் கழித்தார். அதனலே அவருக்குத் திருநாளைப் போவார் என்னும் திருநாமம் அமைந்தது.

ஒரு நாள் ஆசைமிகுந்து புறப்பட்டுச் சிதம்பரத்தையடைந்து திருவெல்லையிற் பணிந்தெழுந்து தில்லை மூவாயிரவர் வீடுகளிலே ஓமாக்கினி வளர்த்தலைக் கண்டு கிட்டப்போகாது அஞ்சி நின்றார். இப்படியிருக்க நான் உள்ளே போதல் அரிது என்று நினைத்து வருந்தி ஆசை வளர்ந்தோங்க உள்ளமுருகிக் கைதொழுது இராப்பகல் திருவெல்லையை வலஞ்செய்து உள்ளே செல்ல முடியாததை நினைந்து வருந்தித் துயின்றார். அப்பொழுது நடராசப் பெருமான் கனவிலே தோன்றி நீ எரியிலே மூழ்கி அந்தணர்களோடு சந்நிதானத்துக்குள் வருவாயெனத் திருவாய் மலர்ந்தருளி அவ்வாறே தில்லைவாழந்தணர்களுக்கும் தீயமைக்கும்படியருளிச் செய்தார்.

தில்லைவாழந்தணர்களும் அவ்வாறு தீயமைத்து அதை அவருக்கு அறியச் செய்தார்கள் நந்தனர் நடராசப் பெருமானுடைய திருவடிகளைத் தியானித்துக் கைதொழுது அழலின்கட் புகுந்தார். புண்ணியப் பிராமண முனிவடிவாகித் திருமேனியிலே முப்புரி நூல் விளங்கச் சடாமுடியுடையராயெழுந்தார். அந்தரதுந்துபி முழங்கிற்று. வானவர் பூமாரி பொழிந்தார்கள். தில்லைவாழந்தணர்கள் கைதொழுதார்கள். தொண்டர்கள் வணங்கிக் களிகூர்ந்தார்கள்.

"கைதொழுது, நடமாடுங்
கழலுன்னி அழல்புக்கார்;
எய்திய அப்பொழுதின்கண்
எரியின்கண் இம்மாயப்,
பொய்தகையும் உருவொழித்துப்
புண்ணியமா முனிவடிவாய்,
மெய்திகழ் வெண்ணூல் விளங்க
வேணிமுடி கொண்டெழுந்தார்"

"செந்தீமேல் எழும்பொழுது
செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போல் தோன்றினர்;
அந்தாதுந் துபிநாதம்
வந்தெழுந்த(து) இருவிசும்பில்;
வானவர்கள் மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந் தாரத்தின்
பனிமலர்மாரிகள்பொழிந்தார்"

"திருவுடைய தில்லைவாழ்
அந்தணர்கள் கைதொழுதார்;
பரவரிய தொண்டர்களும்
பணிந்துமனம் களிபயின்றார்;
அருமறைசூழ் திருமன்றில்
ஆடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப்
போவாராம் மறைமுனிவர்"

திருநாளைப் போவர் தில்லைவாழந்தணர்களுடன் கோபுரத்தைத் தொழுது வணங்கி உள்ளேபுகுந்து கனகசபையை யடைந்ததும் அவரைத் தில்லைவாழந்தணர் கண்டிலர்.

"தில்லைவாழ் அந்தணரும்
உடன்செல்லச் சென்றெய்திக்
கோல்லைமான் மறிக்கரத்தார்
கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
ஒல்லைபோய் உட்புகுந்தார்;
உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார்
யாவர்களுங் கண்டிலரால்."

திருநாளைப் போவார் தம் திருவடிகளை அடையுமாறு சபாநாயகர் திருவருள்புரிந்தார்.

## இறந்தோரைப் போற்றுமின்!

— பண்டித நேரு.

ஹைதராபாத்திலே புதிதாகக் கட்டப்பட்ட துங்கபாத்திரா அணைக்கு ஜவஹர் சாகர் என்னும் பெயரிடுதற்கு ஸ்ரீநேரு அவர்களுடைய சம்மதத்தைக் கேட்டபொழுது அதற்கு அவர் மறுத்ததோடமையாது, வேண்டிய மதிமொழியொன்றையும் உடன்கூறினர். இறந்தவர்களை அவர்கள் சேவைக்குத் தக்கவாறு போற்றுங்கள், அஃதே முறை. மற்றது முறையல்லாததாகும் என்பது அவர் கூறியகூற்று.

## குருமார் குற்றமேற்கின்றனர்

சோபியாவிலே 27 றோமன் கத்தோலிக்கக் குருமார் இரகசிய ஒற்றரா யிருந்தனரென அரசாங்கம் குற்றஞ் சாட்டியபொழுது குருமார் குற்றத்தை ஏற்றுக் கொண்டனரென அறியவருகிறது.

## நாட்டின் உரிமை நாட்டின் நலன் கருதுவோர்க்கே

நாட்டின் நலன் கருதுவோருக்கே நாட்டின் உரிமைகள் கொடுக்க வேண்டுமாகையால் அத்தகைய இந்தியர்களுக்கு வேண்டியஉரிமைகளை அரசாங்கம் கொடுக்குமென்பது தபால் தந்தி மந்திரி திரு. சு. நடேசன் அவர்களுடைய உறுதியான நம்பிக்கையாம்.

# திருக்கேதீச்சர மகிமை

## தக்ஷிண கைலாச மான்மியத்தில் 2ம அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ள சில சுலோகங்களின்படி திருக்கேதீச்சர மகிமைகளாவன

திருக்கேதீச்சரம் மகாமேருமலையினுபிரஞ்சிகரங்களுள் வாயுபகவான் பிடுங்கியெறிந்த மூன்றுசிகரங்களுள் ஒன்று.

திருக்கேதீச்சரத்தில்இன்பமுண்டாக்குவோரும் மகா தேவருமாகிய சிவபெருமான் சுயம்புவும் நித்தியருமாய் எழுந்தருளி இருக்கின்றார்.

கேதீச்சர மகாலிங்கம் பாலாவியின் கரையிலே சகல லோகங்களுக்கும் நன்மை உண்டாக்கும் பொருட்டு வீற்றிருக்கின்றது.

உத்தமனுகிய அந்தணன் பாலாவியிலே ஸ்நானஞ் செய்து பிதிர் தேவர்களுக்குத் தருப்பணம்பண்ணிக் கேதீச்சரப்பெருமானை நமஸ்கரித்து, தசதானமியற்றுவானுயின் அவன் சாயுச்சியபதம் பெறுகின்றான். இது நிச்சயம்.

எந்த மனிதன் பிறவியிடையே கேதீச்சரத்தியானஞ் செய்வானே அவன் சகல பாவங்களினும் நீங்கிச் சிவலோகத்திற் பெருமை உறுகிறான்.

எவனேனுமொருவன் பாலாவியிலே ஸ்நானஞ்செய்து பின்பு கேதீச்சரப் பிரபுவை வணங்கினல் அவன் கையிலே போக மோக்ஷங்களிருக்கும். இவ் விஷயத்தில் ஆராய்ச்சி செய்யவேண்டியதில்லை.

பாலாவியிலே ஸ்நானஞ் செய்து பின்பு கேதீச்சர லிங்கசேவை செய்பவன் பிரமகத்தி முதலிய பாவங்களினின்றும் நீங்குகின்றான். இதில் ஐயமில்லை.

உத்தமனுகிய மனிதன் பாலாவியின் கரையிலே பிண்டங்கொடுக்கில் கயாச்சிராத்த சமமாகிய புண்ணியத்தை அடைகின்றான். இதற்குச் சந்தேகமில்லை,

பிரம விஷ்ணு முதலியோரும், தேவர் கந்தருவர், கருடர், ஆதித்தர் வசுக்கள் என்னும் இவர்களும் இலிங்கமே உண்மை அறிந்தோராகியமுனிவர்களும்என்றும் மகிழ்ச்சியடைந்த மனமுடையவர்களாய் இந்தத் தலத்தில் வசித்தார்கள். ஆதலால் அதன் வைபவத்தைச் சொல்ல வல்லனல்லேன் பிறருஞ் சொல்ல வல்லரல்லார்.

மனிதரும் பசு, பட்சி மிருகம் முதலிய சகல செந்துக்களும் எப்பொழுது திருக்கேதீச்சரத்தில் மரணமடைந்தனவோ அப்பொழுது அப் பெருமானுடைய கிருபையினுல் சிவாலயத்தின் பாகத்திலே தலைவைத்து கிடப்பனவாகும்.

திருக்கேதீச்சரத்தில மரணமடைந்த மனிதருடையவும், பசு, பட்சி முதலான சகல செந்துக்களுடையவும் வலக் காதில் அப் பெருமான் பிரணவ மந்திரத்தை உபதேசித்தருளுவதால் அவைகள் சாயுச்சிய பதவியை அடையும்.

திருக்கேதீச்சரத்தில் மனிதனுவது செந்துவாவது செனிக்கில் முத்தி கையதாகும். ஏனையசெல்வங்களைப் பெறுவது சொல்ல வேண்டுமோ.

நல்லவனுயினுந் தீயவனுயினும் இந்தத் தலத்தில் மரணம்வரையும் பாலாவியில் ஸ்நானம்பண்ணி, கேதீச்சரப் பெருமானை வழிபட்டுப் பிட்சை எடுத்தாவது விடுத்தாவது சீவித்து இந்திரிய நிக்கிரகஞ் செய்து இருப்பானுயின் அவன் குலகொடியோடு கூடிச் சிவசாயுச்சியமடைவன்.

இந்தத் திருக்கேதீச்சரத்தில் ஒருவன் பஞ்சாட்சர மந்திரத்தைச் செபிப்பானுயின் அவன் சித்தியடைவன் இதில் ஐயமில்லை.

துவட்டாவெனபவன், முன்னொரு காலத்திலே புத்திரபாக்கியத்தை விரும்பித் திருக்கேதீச்சரத்தில் வந்து பாலாவியிலே ஸ்நானம் பண்ணிக் கேதீச்சர லிங்கத்தைப் பூசித்தான். அவ்வமயத்லே, சிவ

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சர மகிமை

2-ம் பக்கத் தொடர்ச்சி

பெருமான் பார்ப்பதியம்மையாரோடு தோன்ற, அவரைத் தரிசித்து, சுலோகம் முதலிய துதி வசனங்களைச் சொல்லித் துதிக்க, அவன்பேரில் திருவுளமகிழ்ந்து நீ இங்ஙனம் நம்மைப் பூசித்தமையினால் இன்று தொட்டு இவ்வுலகத்தில் இத்தத்தலத்துக்குத் துவட்டாபுரம் என்னும் பெயருண்டாம் உனக்கு விச்சுவகன்மா என்னும் புத்திரன உண்டாவனென்றும் வரங் கொடுத்து மறைந்தருளினார்,

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கேதீச்சரத்துக்கு அருளிச் செய்த தேவாரத்திருப்பதிகத்தில சொல்லியபடி திருக்கேதீச்சர மென்னும் தலத்தை வணங்கினோரைத் தீவினைகள் சேரா.

ஒருவன் திருக்கேதீச்சர மென்னும் தலத்தை வணங்கத் தீவினைகளெல்லாம் கெடும்.

திருக்கேதீச்சரமென்னும் தலத்தை அடைபவர்களைத் தீவினை யடையாது.

திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் அன்புகொண்டவர்களாய் அப்பெருமானுடைய பாதத்தை வணங்கவல்ல, தொண்டர் மேலே, திரண்டெழுகின்ற வினைகள் கெடும்.

திருக்கேதீச்சரமென்னுந் தலத்தை இரவும் பகலும் சிந்தித்துத் துதித்துத் துக்க முழுவதையுங் கெடுத்து அப் பெருமானுடைய இருபாதத்தையும் வணங்கும் அன்பர்களே சிவனடியார்களென்று சொல்லப் படுவர்,

திருக்கேதீச்சரமென்னுந் தலத்தைச் சிவபெருமான் ஒருகாலத்தும் பிரியார்.

மாதோட்டத்திலுள்ள அடியார்கள் தோத்திரஞ்செய்ய அப்பெருமான் அவர்களுக்குத் திருவருள் செய்கின்றது திருக்கேதீச்சரமென்னுந்தலம்.

கைலாசமலையை வருந்தியெடுத்த இராவணனுடைய தலைகளும் புயங்களும் தத்தம் நிலைகெட மிதிக்கும் போது அவன் வருத்தமுற்று வேண்டுதல் செய்ய அருள்புரிகின்ற முதல்வர் கேதீச்சரப் பெருமான்.

பிரமாவும் விஷ்ணுவும் முறையே அன்னமும் பன்றியுமாய்த் தேடக் காண்டற்கரியராயிருந்தவர் கௌரிநாயகி சமேதராகிய கேதீச்சரப் பெருமான்.

"புத்தராய்ச்சிலபுனை துயிலுடையவர் புறனுரைச் சமணாத, ரெத்தராகி நின்றுண்பவரிய வேழமைகே வேன்மின், மத்தயானையை மறுஇடவுரி செய்து போர்த்தவர் மாதோட்டத், தத்தர்மன்னு பாலாவியின் கரையிற் கேதீச்சர மடைமின்னே."

அன்பர்களே கேதீச்சரப் பெருமான் பேரில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகத்தைப் பாராயணஞ் செய்யுங்கள், அதன் வாயிலாய் மோட்சத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கேதீச்சரத்துக்கு அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகத்திற் சொல்லியபடி பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் கௌரிநாயகியோடு கேதீச்சரப்பெருமான் பிரியாது வீற்றிருக்கின்றார்.

கேதீச்சரப் பெருமான் தமது அடியார்களுக்குச் சரீரத்திலுள்ள நோய்களை நீக்கியருளுகின்றவர்.

கேதீச்சரப் பெருமான் தமது அடியார்மீது வருந்தீவினைகளை நீக்கியருளுகின்றவர்.

பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், ஆதித்தன், சந்திரன்' ஆன்மா என்னும் அட்டமூர்த்தியாயிருப்பவர் கேதீச்சரப் பெருமான்.

தற்பயன் கருதாது பசுக்களுக்குப் பாமுத்தி கொடுக்குமாறு பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மூவராயும சத்தி சிவம் என்னும் இருவராயும இருப்பவர் கேதீச்சரப் பெருமான்.

## வாழ்க்கை வானில்

வளர்பாதி

### 'பொய்மையாளரைப் போற்றுதே'

நிகரற்றஒழுக்கமுறையில்நிற்கும் ஸ்ரீநேருஅவர்கள்ஹைதராபாத்திற் புதிதாயமைக்கப்பெற்ற ஓர் அணைக்கு நேருசாகரம் என்று பயரிடுவதைக் குறித்துக் கண்டனஞ் செய்யும்பொழுது இறந்த பெரியாரை எண்ணி அவர் புகழ் நிலவுவதற்குரிய வண்ணம் நிலையங்களுக்குப் பெயரிடலாம் என்று கூறினர். இது ஒருவர் இருவர் கூற்று. உலகில எங்கணும் உயிருடன் இருக்கும்போதே தாமாகவே பெயரைநிலைநாட்ட அதிகார முறையில் ஆதிக்கஞ் செலுத்துகிறார்கள்பலர். ஸ்ராலின் பெயர்தாங்கியநிலையங்கள் எண்ணிறந்தன உள்ளன. இன்னமும் எத்தனையோ நிலையங்களுக்கு அவர்பெயர் இடப்படும். கிட்லர் உயிரோடிருக்கும்பொழுதும் அவ்வண்ணமே நிகழ்ந்தது. இது மேலைத் தேசத்திலென்றால் எங்கள் நாட்டிலும் அந்த மமதைக் கொள்கை பரவிவருகிறது.

### இந்த நாட்டில் ?

பாலம் திறந்து வைத்தால், புகையிரத நிலயந் திறந்துவைத்தால், அல்லது ஒன்று புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டால் அந்தத் துறையில் அதிகாரத்தில் இருப்பவர்களின் பெயர்கள் புனையப்படுகின்றன. வீதிகள் ஒழுங்கைகளுக்கும் இவ்வாறு நாமமிடப்பட் டழைக்கப்படுகின்றன. தானே தனக்கு மகிமைதேடுவதே தேசத்தொண்டென்று இறுமாந்த அதிகாரப் பெருக்கால் இவ்வண்ணம் செய்வதைக் கண்டிப்பார்களையே இவர்கள் கண்டிக்கின்றார்கள். இவர்களுக்கு ஸ்ரீநேரு போன்ற பெரியார்கள் பித்தலாட்டக்காரர்களாகத் தோற்றுவார்கள். ஹைதராபாத்தில் நடந்த சம்பவம்பற்றி அந்த அணைக்கு ஸ்ரீநேருவின் நாமம் இப்போதையிடப்படலாம் என்பதை வெறுப் மறுக்கார். இருந்தும் கொள்கையளவில் அதுகூடாதென்றே நேருப் பெரியார் கூறினர்.

### அம்மட்டா?

இருக்கும் பெயர்களையே மாற்றி விடுகிறார்கள். இன்று அதிகாரம் பெறும் பொறுப்பாளி தனது பெயரை இட, அவருக்குப் பின் பொறுப்பெடுப்பவர் தனது பெயரை இட, பொது சனங்கள் ஒரு குறிப்புப் புத்தகத்தில் இந்த மாற்றங்களை எல்லாம் குறித்து வைக்காது விட்டால விபரமறியாதுவிழிகெடவேண்டிவரும்.

## அரசாங்க உத்தியோகஸ்தருக்குக் கொழும்பிலுள்ள வீடுகள்

தங்களுக்குக் கொழும்பிலுள்ள வீடுகளை வாடகைக்குக்கொடுத்துவிட்டு அரசாங்க வீடுகளில் வசிக்கும் உயர்தர அரசாங்க உத்தியோகஸ்தர் அவ்வாறு எத்தனை வீடுகளை வாடகைக்குக் கொடுத்திருக்கிறார்களென அறிய வேண்டுமென்னும மனக்குறை மந்திரி திரு. கன்னங்கர அவர்களிடம் உண்டாகி அது பாராளுமன்றத்தில் ஒரு கேள்வியாய் வருமாம்!

## யாழ்ப்பாண மின்சாரம் பற்றி வாக்குவாதம்

யாழ்ப்பாண நகரசபை கொடுக்க வேண்டிய பணங் கொடாதபடியால் மின்சாரங் கொடுக்க முடியாதென்கின்றனர் அரசாங்க மின்சாரப் பகுதியார். அப்படியல்ல காசு ஒரு பகுதி கொடுத்திருக்கிறோம். மிகுதி கொடுப்பதற்கு என்ன கணக்கின்படி கொடுப்பதென ஒரு நீதியான ஒழுங்கு செய்யப்படவில்லையென்கிறார் யாழ்ப்பாண நகரசபைத் தலைவர்.

## நித்திரையிற் படித்தல்

### இந்தியப் பத்திரிகையின் கூற்று

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்நாளில், மூன்றிலொரு பகுதியை நித்திரையிற் கழிக்கிறான். நாம் நித்திரையாய் இருக்கும் போதும், எமது மூளையின் ஒருபகுதி இயங்கிக்கொண்டே இருக்கின்றது. உதாரணமாக நாம் எம் உடம்பை மூடியிருக்கின்ற கம்பளி நகர்ந்தால், எம்மை அறியாது நாம் அதனை இழுத்து மூடுகிறோம். ஒரு தாயானவள் எவ்வளவு சந்தடியிலும உறங்குவாள். ஆனால் அவளது குழந்தை அழுதவுடன் எழுந்து விடுகின்றாள்.

ஒருபிள்ளை இரண்டு மூன்று பதங்களடங்கிய 15 சொற்களைத் திரும்பத் திரும்ப மனனஞ்செய்துகொண்டு நித்திரை செய்வானாகில் மறுநாட்காலை அவன் எழுந்ததும் அவன் மிக விரைவாகச் சொல[illegible] தாக இருக்கும்.

இன்னொரு உதாரணம். நித்திரையில் நகத்தைப் பற்களாற் கடிக்கும் நோக்கமுடைய 20 பிள்ளைகள் இருந்தால் அவர்கள் ஒவ்வொருநாளும் நித்திரைக்குப் புகும்பொழுது "நகத்தைக் கடித்தல் கெடுதல்" என்று திருப்பித் திருப்பிச் சொல்லி நித்திரை செய்தார்களானால் ஆகக் குறைந்தது 8 பிள்ளைகளாகுதல் அவ்வழக்கத்தை விட்டிருப்பர்.

ஒரு ஆசிரியர் பாடசாலையில் உதவாக்கரை எனக் கழிக்கப்பட்ட ஒரு பையனை இச்சாதனமூலம அதாவது நித்திரை புகும்பொழுது திருப்பித் திருப்பிச் சொல்லுதல் மூலம் ஓர் புத்திசாதுர்யமுடைய பையனாகச் செய்துவிட்டார் என ஒரு இந்தியப் பத்திரிகை கூறுகின்றது. ஆகலால் ஒவ்வொரு மாணவனும் தமக்குக் கடினமெனத் தோன்றும் [illegible] பாடங்களைஇவ்வாறு [illegible] அவர்களுக்கு அப்பாடங் கஷ்டமாகத் தோன்றாது.

## செய்தித்திரட்டு

=O=

பிரித்தானிய தொழிற்கட்சிக் கூட்டமொன்றிற் பேசும்பொழுது தென் ஆபிரிக்க நிறத்துவேஷ சட்டங்கள் கீழானவை, வாழ்க்கை நடைமுறைக்கு ஆகாதவை, பெருந் தீமையை விளைப்பவை என்று திரு. ஜேம்ஸ் கிறிபித்ஸ் அவர்கள் கடிந்து பேசினார்.

X X X

கொழும்பு அரசாங்க வைத்திய நிலையத்துக்கு ஐந்தடுக்குக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்க வைத்திய பகுதியார் தீர்மானித்திருக்கின்றனர். இத்தீர்மானத்தை வைத்திய நிலைய ஆலோசனைச் சபையாரும் அரசாங்க வைத்தியர்களும் ஆதரிக்கவில்லையென்று அறியவருகிறது.

X X X

62 ஆசிரியர்கள் தங்களுக்குத் தாரதரப்பத்திரங்கள் கொடுக்க அரசாங்கம் முறையினமாக மறுத்துவிட்டதென்று அரசாங்கத்தின்மீது வழக்குத் தொடருகின்றனர்.

X X X

பாகிஸ்தானியர் துவிச்சக்கர வண்டி செய்து விற்கிறனர். இப்பொழுது வெளியூர் வண்டிகளிலும் விலை சிறிது கூடவாம். ஆனால் விரைவில் விலை குறைக்கக் கூடிய நிலைமை வருமென்று நம்பிக்கையிருக்கின்றது.

X X X

கட்டுப்பாடுகள் நீங்கிய காரணத்தால் இந்திய துணி வகைகள் இலகுவாகப் பெறக்கூடியதாயிருக்குமாம்.

X X X

சேர் ஜெறூட் விஜயகோன் அவர்களுடைய இடத்துக்கு அரசாங்க மேற்சபை அங்கத்தவராக. திரு. H de Z. சிறீவார்தன அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

X X X

ஐக்கிய தோண்டுக்கு ஆண்களிலும் பெண்கள் சிறந்தவர்கள் என்கிறார் திரு. V. வீரசிங்கம் M. P. ஆண்களிலும் பெண்கள் சத்தியத்தைக் கடைப்பிடிப்போ ரென்பது அவர் கூறுங்காரணம்.

X X X

வெலிசாகசநோயாளர் வைத்திய நிலயத்தில் ஒரு படுக்கை அமைப்பதற்கு வேண்டிய ரூபா 750/= யாழ்ப்பாணம் சென்பாற்றிக்ஸ் கல்லூரியார் கொடுக்க முன் வந்திருக்கின்றனர்.

X X X

கொழும்பு நகர மண்டபத்துள் கள்வர் புகுந்து சிலபொருட்களைக் கொண்டுபோய்விட்டனர்.

### சாணத்தின் பிரயோசனம்!

நேஷனல் கெருல்ட். என்பவர் பசுவின் சாணம கோழி வளர்ப்புக்கு ஏற்ற உணவு எனக் கூறுகின்றார். இவர் மேலும் கூறுவதாவது, சாணத்தைப் பக்குவப்படுத்தாது கோழிகட்குத் தீனியாய்க் கொடுத்தால் அது அவைகளின் இனத்தை மாற்றும் சிறிதில் இவ்வுணவுமூலம் வளர்க்கப்பட்ட பேட்டுக்கோழி வளர்ந்ததும் சேவலாக மாறிவிடும் என்றும் கூறுகின்றார். இப்பொழுது இந்தியாவில் உள்ள மிருக வளர்ப்புக் காரியாலயத்தில் இனத்தை மாற்றாது கோழி வளர்ப்பதற்கு இச்சாணத்தில் இருந்து ஒருவகை உணவு தயாரிக்கப்படுகின்றது எனத் தெரியவருகின்றது.

## கல்லோயாக் குடியேற்றம்

காணியில்லாத 150 கமக்காரக் குடும்பங்களுக்குக் கல்லோயாவிலே இடங் கொடுக்கப்படுமாம். இவர்கள் இலங்கையின் பலபாகங்களிலுமிருந்து தெரிந் தெடுக்கப்படுவர் எனக் கூறப்படுகின்றது.

## மன்னார் - யாழ்ப்பாணத் தூரம் குறைகின்றது

இலங்கையின் வடமேற்குக் கரையோரமாகப் புதிய வீதி ஒன்று இணைக்கப்படுகின்றது. இவ்வீதி புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய ஊர்களைத் தொடுக்கின்றது. இவ்வீதிமூலம் பிரயாணஞ் செய்வதால் கொழும்புக்கும் யாழ்பாணத்திற்கும் ஏறக்குறைய 25 மைல் தூரம் குறையும். கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகியவைகளுக்கிடையேயுள்ள தூரத்தையும் இப்பாதை வெகுவாகக்குறைக்கும்.

கொழும்பிலிருந்து புத்தளம் வரை கரையோரமாக அமைக்கப்பட்ட பழைய வீதியைப் பின்பற்றி இப்பாதை செல்கின்றது. பின் புத்தளத்திலிருந்து பூநகரிவரையிற் செல்கின்றது. இயந்திரப்படகின் மூலம் அல்லது பாதையின் மூலம் பூநகரியில் இருந்து பிரிக்கும் கடலைக் கடந்து யாழ்ப்பாணம் அடையலாம்.

## லண்டன் சர்வகலாசாலைப் பரீட்சைகளிற் சிங்களம்

லண்டன் சர்வகலாசாலைப் பரீட்சைகளில் சிங்களம் ஒரு பாடமாயமைப்பதிற் காசுக் கஷ்டமிருப்பதாக, லண்டன் சர்வகலாசாலையார் இலங்கை வித்தியாபகுதியினருக்கு அறிவித்திருக்கனர். இக் கஷ்டத்தை நீக்கிச் சிங்களத்தை ஒரு பாடமாயமைப்பதற்கு வேண்டிய பணத்தைக் கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்வந்திருக்கின்றது.

## வித்தியா பகுதியின் மந்தகதி

திரு. தொமஸ் அமாசூரிய அவர்கள் தலைமையில் செவ்வாய்க்கிழமை 30-9.52ல் நடந்த தென்மாகாணத் தோட்ட முதலாளிகளின் பொதுக் கூட்டமொன்றில் பொதுசனம் எழுதும் கடிதங்களுக்கு மறுமொழி எழுதுவதில் வித்தியா பகுதியார் கையாளும் மந்தகதி மிகவுங் கண்டிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் க்ஷயரோகம்

அயர்லாந்தைச் சேர்ந்த D. M. M. லோங் இப்பொழுது சன்பட்ரிக்ஸ் கல்லூரி அதிபராக இருக்கின்றார். இவர் ஓர் பொதுக் கூட்டத்திற் பேசிய பொழுது தான சிறு பராயத்தில் தனது தாய்நாட்டில் க்ஷயரோகம் புரிந்த அட்டூழியங்களைக் கண்டு கவலையுற்றதாகவும், இப்பொழுது வடபகுதியாகிய யாழ்ப்பாணத்திலும் இந்நோய் பரவியிருப்பதைக் கண்டு கவலையுறுவதாயும் கூறினார். மேலும் இவர் க்ஷயரோகத்திலிருந்து பெறும் சுதந்திரமோ எல்லாச் சுதந்திரங்களிலும் பார்க்க எவ்வளவோ பெறுமதியான தென்றும் கூறினார். 750 ரூபாய் செலவில் வெலிசரையில் ஒரு படுக்கை வசதி செய்து கொடுக்கும பொறுப்பை இக்கல்லூரி மேற்கொண்டுள்ளது என்றுங்குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

தங்காலத்திற்கேற்ற / அழகான டிசைன்களில்

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறாப்பர்.



| திறமான | திறமான |
|---|---|
| தேக்க மரங்கள் | ருணீமார்க்ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிறேட், யாழ்ப்பாணம்.



சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்
# சுசீலாவின் காதல்
யாழ். நகர மண்டபத்தில்
ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்
1952-ம் ஆண்டு
மார்கழி மீ 6-உ சனிக்கிழமை

சைவ பரிபாலன சபை
நாவலர் ஆச்சிரம நிதிக்காக

மிக விமரிசையாக நடத்தப்படும்


# சிவஞான போதச் செம்பொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"சீவன்முத்தன் சிவ பக்தர்களோடு இணங்கி நிற்பன்"

சீவன் முத்தன் தன்னை மும்மலங்களும் ஒரோவழித் தாக்காதபடி அவற்றை அறக்களைவன் என்றோம். ஆனல், இம்மலங்கள் ஒரோவழித் தாக்குதல் அதற்குரிய இலக்கு வாய்த்துழி ஏதுவாதல் மாத்திரையாம். இது வன்றி இலக்கு இல்லாத வழியும் தாக்கா. சிவபத்தரல்லாத அஞ்ஞானிகளின்கூட்டம் இவ்வாறன்று. இலக்கு வாயாத வழியும் அவ்வஞ்ஞானிகள் இலக்கு வாய்க்குமாறு செய்துகொண்டு பல உபாயங்களாலும் தம்முடைய விபரீத உணர்வைச் சீவன்முத்தர்பாற் செலுத்தி அவரை மலங்களானய பிறவிக் குழியில் வீழ்த்தித் துயருறுத்துவர். ஆதலாற் சீவன் முத்தன் இவரது இணக்கம் மும்மலங்களினும் மிகக் கொடியதென்றுணர்ந்து அதனின்றும் அஞ்சி ஒதுங்குவன். ஆனல் பரமுத்தனையும் இவரது இணக்கம் பாதிக்குமோவெனின், அன்று. இவனுக்கு அறிவு தொழில்கள் புறத்தே வியாபாரியாதாதலால் அஞ்ஞானிகளின் கூட்டுறவு இவனை ஒரு சிறிதும் பாதியாது. ஆகவே சீவன் முத்தரே இவ்வஞ்ஞானிகளின் கூட்டத்தினின்றும் ஒதுங்குவர். ஆனல் இவரது இணக்கத்தினின்று ஒதுங்குதல் மாத்திரம் போதாது. அக்கூட்டத்திற் றொன்று தொட்டு வந்த பயிற்சியும் இச் சீவன் முத்தனை விட்டொழிய வேண்டும். இன்றேல் இச் சீவன் முத்தன் இவரது கூட்டத்தினின்று எத்துணை ஒதுங்கினும், அவராக வலிந்து கூடின், பண்டைப் பயிற்சி வயத்தால் அவரது கூட்டத்தின்ணங்க நேரும். அக்காலத்தும் அவரது கூட்டத்தைத் தவிர்த்தற்கான உபாயத்தைச் செய்வன். இவ்வுபாயம் சிவபத்தர்களாகிய மெய்ஞ்ஞானிகளின் இணக்கமே. தீயாரிணக்கத்தைத் தவிர்த்தற்கு மெய்ஞ்ஞானிகளாகிய சிவபத்தரிணக்கம் உபாயமாம். கழி காமத்தன் ஒருவனுக்கு அத் தொடர்புடையார் இணக்கம் காமப்பயிரை வளர்த்து அத் தொடர்பற்றார் இணக்கத்தைப் பாறச் செய்வது போற் சிவத்தின்பால் இச்சை மீதூர்ந்த சீவன் முத்தனுக்கு அச சிவத்தின் பாற் தொடர்புடைய சிவபத்தரிணக்கம் சிவானுபவமாகிய பயிரை வளர்த்து அஞ்ஞானிகளின் இணக்கத்தைப் பாறச் செய்யும். இது பற்றியே சீவன் முத்தன் சிவபத்தரோடு எஞ்ஞான்றும் இணங்கி அவர்பால் மிகுந்த அன்புடையவனய் ஒழுகுவன். இக் கருத்தையே இச்சூத்திரம் 'அன்பரொடு மரீஇ' என்றுணர்த்தும். ஈண்டு 'மரீஇ' என்பது பொருள்.

**சீவன் முத்தன் அடியாரது வேடத்தைச் சிவமெனக் கண்டு வழிபடுவன்.**

சீவன் முத்தன் அடியார்களோடிணங்கி அடியாரல்லாத அஞ்ஞானிகளிணக்கத்தையும் அதுபற்றி வரும் மும்மல வாதனையையும் ஒழிப்பனென்றோம். அடியாரிணக்கம் சீவன் முத்தனுக்கு எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் கிடைத்தற்பாலதன்று. ஆதலாற் சீவன் முத்தன் வேறோர் உபாயத்தாலும் மல வாதனையை ஒழிப்பன். அவ் வுபாயம் யாது என்பதையும் ஆராய்வாம். அடியார்கள் தமது திருமேனிகளிற் சிவத்தின் அருட்குணங்களைச் சிந்தனையுறுத்தும் சிவ சின்னங்களாகிய விபூதி உருத்திராக்கம் முதலிய சிவவேடங்களைத் தரித்துக் கொள்ளுவர். இவ் வேடங்கள் அவற்றைத் தரித்துக்கொள்ளுவார்க்கும் பிறர்க்கும் சிவசிந்தனையைப் பயப்பித்துச் சிவஞானப் பயிரை வளர்க்குமென்பதை நாமனுபவத்திலறிவோம். இவ் வேடங்கள் யாவர்மாட்டுக் காணப்படினும் அத்தன்மைத்தேயாம். சிவன் அடியார்கள்மாட்டுக் காணப்படினும் அல்லாதார்மாட்டுக் காணப்படினும் அத்தன்மைத்தேயாம். இவ் வேடத்தைச் சிவன் அடியாரல்லாதார் சிலரும், சிவன் அடியார் போலக் காணப்படுமாறு தரித்துலவுவதை அறிவோம். ஆனல் இவரதிணக்கம் முன்னர்க் கூறியாங்குத் தள்ளற்பாலதேயாயினும், இவரது வேடம் சிவ சிந்தனை உறுத்துதற்கு உதவுதலால் கொள்ளற்பாலதேயாம். இவ் வேடங்களைச் சிந்திப்பார்க்கும் மெய் வேடங்களைச் சிந்திப்பார்க்கும் போலச் சிவம் விளங்கி அவரது மும்மல வாதனை நீக்குவதிற் றடையில்லை. இதனலேயே சீவன் முத்தனெவரிடத்தேனும் இலாடத்திட்ட திருநீறு சாதனம் முதலிய சிவவேடங்களைக் காண்புழி அவரைச் சிவமெனவே வழிபட்டுச் சிவஞானத்தை வளர்ப்பன். இக்கருத்தையே இசசூத்திரம் 'மாலறநேயம் மலிந்தவர் வேடமும்.. ... அரனெனத் தொழுமே' என்றுணர்த்தும். மயக்கமற்றுச் சிவபத்தி மலிந்தவர்களது வேடத்தைத் தாங்கிய சீலர்களைச் சீவன் முத்தன் சிவமெனவே பாவித்து வழிபடுவனென்பது இவ் வாக்கியத்தின் கருத்து. இவ்வழிபாடு சிவாகமங்களிற் கூறப்படும் மூவகை வழிபாடுகளிற் குருசங்கம வழிபாடுகளாம். இது சீவன் முத்தர்களுக்கு மாத்திரம் பயன்தருமென்பது அன்று. சீவன் முத்தர்க்கும் பயன் தரும் இவ் வழிபாடு ஏனையோர்க்கும் பயன் தருமென்பது சொல்லாமலே விளங்கும். ஆனல் இவ் வழிபாட்டின் ஒரு சிறப்பே சீவன் முத்தனுக்குப் பெரிதும் பயனைத் தரும். ஏனையோர்க்கு அதுபோதன்று. அவர் இவ் வழிபாட்டில் நெடுங்காலம் பயின்று வரவே, படிக்கிரமமாய்ச் சிறிது சிறிதாய்ப் பாசம் நீங்கப்பெற்றுச் சீவன் முத்தராகி, மல வாதனையும் அற நீங்கிச் சிவனது சீபாதத்தை அணைவரென்பது கருத்து.

**சீவன் முத்தன் சிவலிங்கங்களையும் சிவமென வழிபடுவன்.**

சீவன் முத்தன் சிவ வேடங்களைச் சிவமென வழிபட்டு மலவாதனையை ஒழிப்பனெனறோம். சிவபத்தரிணக்கம் எக்காலத்தும்கிடையாதாதலால் அவரது வேடங்களை வழிபட்டு மலவாதனை நீங்கப்பெறுவனென்றுஞ் சொன்னேம். என்னல், சிவபத்தர் ஒரோவொரு காலத்துக் கிடையாது போவது போற் சிவ வேட முடையாரும் கிடையாது போகலாம். ஆதலால், சீவன் முத்தன் மற்றுமோர் உபாயத்தாலும் மலவாதனையை ஒழிப்பன். அவ்வுபாயம் யாது என்பதையும் ஆராய்வாம். இச் சீவன் முத்தன் பால் சிவஞானத்தை வளர்த்து மலவாதனையை நீக்கி உதவுவது சிவவேடமுடையார் மாட்டுள்ள வேடமன்றி அவ்வேடமுடைய சீவனேயன்று. என்னல் அவ்வேடம் சித்துப் பொருள்களின் பாற் காணப்பட்டால் மாத்திரம், அவ்வாறுதவுமென்பதன்று. சடப்பொருள்களின்பாற் காணப்படினும் அவ்வாறுதவுவதிற் றடையில்லை. இச்சிவவேடங்களையுடைய சடப்பொருள்களே சிவலிங்கங்களெனப்படும். இச் சிவ வேடங்களை ஒவ்வொருவரும் தத்தம்மனம் போனவாறு எண்ணுதபடி அவ் வேடங்கள் யாவை? அவற்றால் உணர்த்தப்படும் சிவ குணங்கள் யாவை? என்பதைச் சிவாகமங்கள் செவ்வனே விளக்கியுள்ளன. அவற்றிற் சொல்லியபடி சீவன் முத்தன் தாவரசங்கமங்களில், சிவவடிவங்களாகிய சிவவேடங்களை அமைத்துக்கொண்டு அவற்றைச் சிவமெனவே பாவித்து வழிபட்டு மலவாதனையினின்றும் நீங்குவன். இக் கருத்தையே இச் சூத்திரம் 'ஆலயந் தானும் அரனெனத் தொழுமே' என்றுணர்த்தும். ஈண்டு ஆலயமென்றது ஏற்புழிக் கோடலால், சிவாலயத்தை உணர்த்தி ஆகுபெயராய் நின்று சிவாலயங்களில் அமைக்கப்பட்ட சிவமூர்த்தங்களை உணர்த்தும். இவ்வழிபாடு இலிங்கவழிபாடு அல்லது சிவலிங்க வழிபாடு என்ப்படும், குருசங்கம வழிபாடுகளைப் போலவே இவ் வழிபாடும் சீவன் முத்தர்க்கு மாத்திரமன்றி ஏனை எத்திறத்தோர்க்கும் பயன் தருவதாகும். இவ் வழிபாட்டில் நாம் ஒரு சிறிதும சலிப்பின்றி நின்று எவ்வகைப் பாசங்களினின்றும் நீங்கிச் சிவபோக வாழ்வு பெற்று இன்புறவோம்.

—சிவதொண்டன்.

# தமிழ் வழி வந்த மலையாளம்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

கொடுந்தமிழ் நாடுகளைப் பன்னிரண்டு என முற்காலத்தார் கணக்கிட்டனர்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்' என்றார் தொல்காப்பியர். இவை இன்ன வென்பதை

தெனபாண்டி குட்டம்
குடங்கற்கா வேண்பூழி
பன்றி அருவா
அதன்வடக்கு—நன்ருய
சீதம் மலாடு புனனடு
செந்தமிழ்சோ
ஏதமில் பன்னிருநாட் டென்

என்ற பழஞ்செய்யுள் விளக்குகிறது. இவற்றல குட்டநாடு, குடநாடு, வேணுடு பூழி நாடு என்பன சேரநாட்டுப் பகுதிகளென ஐயமின்றிக் கூறலாம். தாயைத் தள்ளையென்றும், தந்தையை அச்சன் எனறும் குட்ட நாட்டினரும் குடநாட்டினரும் கூறுவரெனச் சொல்லப்படுகிறது. நன்னூல், 272 மயிலை) இவ்வழக்காறு இன்றும் சேரநாட்டில் உளதென்பது நாம் நன்கு அறிந்ததே. இச்சிறு வேறுபாடுகள் இருந்த போதிலும, இவை யனைத்தும் தமிழ்நாட்டுப் பகுதிகளே யென்பதில ஐயமில்லை. இங்கே வழங்கிய மொழியும தமிழேயாகும.

# விசேட சமய அறிவுடையோரே சமய ஆசிரியராதல் வேண்டும்

கஞ்த்துறை பாலிக வித்தியாசாலையில் நடந்த களுத்துறைப் புத்தசபையின் ஆண்டு நிறைவுக் கூட்டத்திற் பேசுமபொழுது சித்திரம், சங்கீதம், நடனம் ஆதியவற்றில் விசேட அறிவுடையோரே அத் துறைகளில் ஆசிரியராயமைக்கப்பெறுகின்றனர். அப்படியிருக்க, சமய ஆசிரியராயிருப்பதற்கு அவ்வாறு விசேட அறிவுடையோர் அமைக்கப்பெறுமலிருப்பது என் என்று விளங்கவில்லை என்கிறார் திரு. D. பீற்றர் சில்வா அவர்கள்

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday, October 7. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org